# <u>சிவகங்கை நகராட்சி</u>

## <u>சாதாரண கூட்டம்</u>

2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26.12.2023 ம் நாள் சோபகிருது வருடம் மார்கழி 10ம் நாள் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 04.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் சாதரண கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கீழ்கண்ட பொருள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். உறுப்பினர்கள் அனைவரும் வருகை தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
சிவகங்கை நகராட்சி

1. சிவகங்கை நகராட்சியில் நடைபெற்று வரும் அறிவுசார் மையம் மற்றும் நூலகத்தின் மதிப்பீடு ரூ.185.00 இலட்சம் ஆகும். இப்பணிக்கு 07.01.2022 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஸ்ரீ வைகுந்தநாதர், சென்னை நிறுவனத்திற்கு 20.01.2022 அன்று (4.95% அதிகம்) பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் 90% வரை நிறைவு பெற்றுள்ளது. நாளது தேதி வரை ரூ.140.96 இலட்சம் செலவினம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் தோராயமாக ரூ.65.80 இலட்சம் ஆகும் இந்நிலையில் அறிவுசார் மையத்தின் உள் கட்டமைப்பு உபகரணங்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் விலை விகிதப்படி அதற்குண்டான செலவினம் ரூ.17.00 இலட்சம் ஆகும். எனவே, இப்பணியினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்திற்கு மிகாமல் விலைப்புள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்ளவும், அதற்குண்டான செலவினத்தையும் மேலும் கூடுதலாக ஆகும் செலவினத்தையும் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. உள் கட்டமைப்பு உபகரணங்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்ணயக்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் விலை விகிதப்படி, அதற்குண்டான செலவினம் ரூ.17.00 இலட்சம் ஆகும். எனவே, இப்பணியினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்திற்கு மிகாமல் விலைப்புள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. மேற்படி பணியினை செய்ய ஆகும் செலவினத் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 179**

2.சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட மானாமதுரை ரோடு மெயின் சாலையில் அமைந்துள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் நீரேற்று நிலையத்தில் 100HP மோட்டார் இயங்கி வருகிறது. இதில் ஏற்கனவே 120mm UG Cable பொருத்தப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் மோட்டார் தொடர்ந்து இயங்குவதால் cable. Fuse carrier, Transformer fuse carrier அடிக்கடி எரிந்து விடுகிறது. இதனால் மோட்டார் தொடர்ந்து இயக்க முடியாமல் நகரின் அனைத்து பகுதிகளிலும் பாதாள சாக்கடை ஆள் இறங்கும் குழிகளில் கழிவுநீர் சாலையின் மேல் பொங்குவதாக பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதியும், சுகாதார நலன் கருதியும் மானாமதுரை சாலையில் அமைந்துள்ள பாதாள சாக்கடை கழிவு நீர் நீரேற்று நிலையத்தில் 240mm UG Cable, 3.5 core 75.00M, Cable Leg 40 Nos, 500 Amp HRC fuse carrier 6 Nos, 24x24 Metal Box and 100 HP Panel Board-3 Nos புதிதாக மாற்றுதல் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/-ற்கு (ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதி 2023-24ன் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியானது பாதாள சாக்கடை பணி என்பதாலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுதியை எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி சட்டம் 1998 பிரிவு 57(7)ன் கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 180**

3. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட மானாமதுரை சாலையில் அமைந்துள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் நீரேற்று நிலையத்தில் 240mm UG cable, 3.5 core 75.00M, Cable leg 40 Nos, 500 Amp HRC fuse carrier 6 Nos, 24x24 Metal Box and 100HPPanel Board – 3Nos புதிதாக மாற்றுதல் பணிக்கு 03.10.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி கொடுத்துள்ள தொகை |
|---|---|---|
| 1 | M/S.Paramesh, Motor & Spares, Sivagangai | ரூ.4,91,222/- |

| | | |
|---|---|---|
| 2 | M/S.G.D.Bharath Rewinding Works, Sivagangai | ரூ.4,96,190/- |
| 3 | M/S.Vasantha Electric & Engineering Works, Sivagangai | ரூ.5,04,214/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/S.Paramesh, Motor & Spares, Sivagangai என்பவரது விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் சுகாதார நலன் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/S.Paramesh, Motor & Spares, Sivagangai என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.
   **அனுமதிக்கப்பட்டது.**
   **மன்றத்தீர்மானஎண்: 181**

4. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 முதல் 27 வரையுள்ள பகிர்மானக் குழாய்களில் உடைப்புகள் மற்றும் பழுதுகள் 'ஏற்படுகின்றன. எனவே, பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேற்படி பகுதிகளில் ஏற்படும் பகிர்மானக் குழாய் உடைப்புகள் மற்றும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்தால் மட்டுமே பொதுமக்களுக்கு குடிநீர் சீரான முறையில் விநியோகம் செய்ய இயலும். மேலும், நகர்ப்பகுதிகளில் ஏற்படும் பகிர்மானக் குழாய் உடைப்புகள் மற்றும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/-ற்கு (ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் நிதி 2023-24ன் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியானது குடிநீர் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
   **அனுமதிக்கப்பட்டது.**
   **மன்றத்தீர்மானஎண்: 182**

5. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட மதுரை-தொண்டி மெயின் சாலை, மஜீத் ரோடு 8வது தெரு மற்றும் நகர்ப்பகுதிகளில் உள்ள பாதாள சாக்கடை ஆள் இறங்கும் குழிகள் சேதமடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதால் பொதுக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் செல்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, மேற்படி பகுதிகளில் உள்ள பாதாள சாக்கடை ஆள் இறங்கும் குழிகளை உயரப்படுத்துதல் பணிக்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,90,000/-ற்கு (ஒரு இலட்சத்து தொன்னூராயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதி 2023-24ன் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியானது பாதாள சாக்கடை பணி என்பதாலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி சட்டம் 1998 பிரிவு 57(7)ன் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 183**

6. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்..04, பிள்ளையார் கோவில் குறுக்குத் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிக்கு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்தி திட்டம் 2022-2023ன் கீழ் ரூ.4,00,000/- (நான்கு இலட்சம்) மதிப்பீட்டில் 03.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.பி.முருகன் சிவகங்கை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவு |
| 2 | திரு.எம்.நாட்டரசன் சிவகங்கை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.084% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு வலை விகித்த்தை விட 0.05% குறைவாக வழங்கிய திரு.பி.முருகன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி திட்டப்பணியானது விரைந்து முடிக்க வேண்டியுள்ளதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 184**

7. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 14 வரையுள்ள பகிர்மானக் குழாய்களில் உடைப்புகள் மற்றும் பழுதுகள் ஏற்படுகின்றன. எனவே, பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேற்படி பகுதிகளில் ஏற்படும் பகிர்மானக் குழாய் உடைப்புகள் மற்றும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்தால் மட்டுமே பொதுமக்களுக்கு குடிநீர் சீரான முறையில் விநியோகம் செய்ய இயலும். மேலும், நகர்ப்பகுதிகளில் ஏற்படும் பகிர்மானக் குழாய் உடைப்புகள் மற்றும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/-ற்கு (ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் நிதி 2023-24ன் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியானது குடிநீர் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
   **அனுமதிக்கப்பட்டது.**
   **மன்றத்தீர்மானஎண்:** 185

8. சிவகங்கை நகராட்சியில் மானாமதுரை ரோடு மெயின் சாலையில் அமைந்துள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் நீரேற்று நிலையத்தில் 100 HP. மோட்டார் - 1 எண்ணம், 40 HP மோட்டார் - 1 எண்ணம் மற்றும் காளவாசல் அருகில் அமைந்துள்ள சப் பம்பிங் மெயினில் 20 HP. மோட்டார் - 2 எண்ணம் ஆகியவற்றை கழற்றி காயில் கட்டி பொருத்துதல் பணிக்கு 16.10.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலைப்புள்ளி கொடுத்துள்ள தொகை** |
|---|---|---|
| 1 | **M/S.Paramesh, Motor & Spares, Sivagangai** | ரூ.5.98.757/- |
| 2 | **M/S.G.D.Bharath Rewinding Works, Sivagangai** | ரூ.6,21,558/- |
| 3 | **M/S.Vasantha Electric & Engineering Works, Sivagangai** | ரூ.6,41,431/- |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **M/S.Paramesh, Motor & Spares, Sivagangai** என்பவரது விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் சுகாதார நலன் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி வழங்கிய **M/S.Paramesh, Motor & Spares, Sivagangai** என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.
   **அனுமதிக்கப்பட்டது.**
   **மன்றத்தீர்மானஎண்:** 186

9. சிவகங்கை நகராட்சியில் மானாமதுரை ரோடு மெயின் சாலையில் அமைந்துள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் நீரேற்று நிலையத்தில் 100 HP. மோட்டார் - 1 எண்ணம், 40 HP மோட்டார் - 1 எண்ணம் மற்றும் காளவாசல் அருகில் உள்ள சப் பம்பிங் மெயினில் 20 HP. மோட்டார் - 2 எண்ணம்

ஆகியவற்றை கழற்றி காயில் கட்டி பொருத்துதல் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6,00,000/-ற்கு (ஆறு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் நிதி 2023-24ன் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியானது பாதாள சாக்கடை பணி என்பதாலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி சட்டம் 1998 பிரிவு 57(7)ன் கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

   **அனுமதிக்கப்பட்டது.**

   **மன்றத்தீர்மானஎண்: 187**

10.சிவகங்கை நகராட்சிக்கு சொந்தமான தெற்கு மயானத்தில் இயங்கி வரும் எரிவாயு தகன மேடை (Casifier Crimitorium)க்கு CTO இசைவாணை கட்டணம் மற்றும் விண்ணப்பம் பதிவு செய்ய கட்டணம் ரூ.12,200/-க்கு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

கட்டணம் ரூ.12,200/-க்கு பொது நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 188**

11. பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஆணையாளர் ஈப்பு வாகனம் எண் TN 63J 9787 எண்ணிட்ட வாகனத்தின் இன்ஜின் ஆயில், மற்றும் பவர் பேரிங், ஆயில் ஸ்டோரிங் உள்ளிட்ட இதர பழுதுகளை நீக்க பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ அம்பாள் ஆட்டோ மொபைல்ஸ்<br>92/70, ராகவேந்திர நகர்,<br>பாதரக்குடி, காரைக்குடி தாலுகா,<br>சிவகங்கை மாவட்டம். | - | ரூ.20,500/- |
| 2. | தி.நியு கிரேட் இந்தியன் ஆட்டோ மொபைல்ஸ்<br>மேல ஊரணி வாய்க்கால் தெரு,<br>காரைக்குடி | - | ரூ.21,450/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

குறைந்த விலைப்புள்ளிகள் கொடுத்துள்ள ஸ்ரீ அம்பாள் ஆட்டோ மொபைல்ஸ் பாதரக்குடி நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி ரூ.20,500/- (ரூபாய் இருபதினாயிரத்தி ஐநூறு மட்டும்) ஒப்புக்கொள்ளவும் நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 189**

12. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 சர்வே எண்.87ல் புதிதாக தினசரி சந்தை அமைக்கும் பணிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023-24 மதிப்பீட்டுத் தொகை ரூ.349.00 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி 29.09.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகளா என சரிபார்க்கப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதி பெற்றுள்ளதால் 05.10.2023 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.M.கார்த்திகேயன், இராமநாதபுரம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.03% குறைவு |
| 2 | திரு.S.முனியசாமி, இராமநாதபுரம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.27% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.03% குறைவாக வழங்கிய திரு.M.கார்த்திகேயன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியானது திட்டப்பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து பணிமுடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள திரு.M.கார்த்திகேயன் என்பவருக்கு கூடுதல் வைப்புத்தொகை செலுத்தக் கோரி (LOA) கடிதம் வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
   **அனுமதிக்கப்பட்டது.**
   **மன்றத்தீர்மானஎண்: 190**

13. நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2022-2023 நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்கள் 1, 2, 3, 7, 11, 13 மற்றும் 14 வார்டுகளில் தார்சாலை அமைக்கும் பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் திரு.இ.கந்தசாமி என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவன கடிதத்தில் இப்பணிக்கு 30% நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கடிதம் வரப்பெற்றுள்ளது. தார்சாலை அமைக்கும் பணிகள் தரமற்று உள்ளதாக வார்டு நகர்மன்ற உறுப்பினர்களிடம் இருந்தும் வரப்பெற்ற புகார் மனுவின் பேரில் சென்னை உயர்நிதி மன்றம் மதுரை கிளையில் திரு.செ.ராஜகுமாரன் த/பெ.செல்லத்துரை அவர்கள் தொடர்ந்த வழக்கு எண் டபிள்யூ பி(எம்.டி) எண்:22278/2023ல் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சம்மந்தப்பட்டவர்களுக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பக்கோரி மாண்புமிகு நீதியரசரால் மூன்று வார காலம் அவகாசம் அளித்து

மனு தேதி குறிப்பிடாமல் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட 30% விழுக்காடு தொகையை ஒப்பந்ததாரருக்கு வழங்கியது சம்மந்தமாக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு.அ.கதிரவன் அவர்கள் இவ்வலுவலக கடித ந.க.எண்..625/2023/இ1. நாள்:25.09.2023ம் தேதிய கடிதத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் படசத்தில் வழக்கு முடிந்து தீர்ப்பு வரும் வரை ஒப்பந்ததாரருக்கு எவ்வித பில் பட்டியல் தொகை வழங்கக்கூடாது என கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். நகராட்சி வழக்கறிஞர் திரு.அ.கதிரவன் அவர்களின் 25.09.2023ம் தேதிய கேட்பின் படி தெளிவுரை வழங்கிய வகையில் கட்டணம் ரூ.5,000/-மற்றும் வழக்கிற்கு தேவையான வக்காலத்து படிவம் தாக்கல் செய்தும், வழக்கிற்கு தேவையான எதிர்வாதுரை தயார் செய்து வழக்கை நடத்திச் செல்லும் வகையில் 25.09.2023ம் தேதிய கடிதத்தின் படி ரூ.9,500/- வழக்கு கட்டணமாகவும், ஆக மொத்தம் ரூ.14,500/- (ரூபாய பதினான்காயிரத்தி ஐநூறு) மட்டும் வழக்கறிஞர் திரு.அ.கதிரவன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக் குறிப்பு</u>

சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண் டபிள்யூ பி (எம் டி) எண்:22278/2023 ஒப்பந்ததாரருக்கு பில் பட்டியல் தொகை வழங்குவது சம்மந்தமாக தெளிவுரை வழங்கிய வகையில் ரூ.5,000/- மற்றும் வழக்கு கட்டணம் ரூ.9,500/- ஆக மொத்தம் ரூ.14,500/- (ரூபாய் பதினான்காயிரத்தி ஐநூறு) மட்டும் வழக்கறிஞர் திரு.அ.கதிரவன் அவர்களுக்கு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம். நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வழக்கறிஞர் திரு.அ.கதிரவன் அவர்களுக்கு தொகை வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்..0002375/2023/பி2.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 191**

14.சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:21, சர்வே எண்:87ல் உள்ள தினசரி சந்தை புதியதாக அமைக்கும் பணிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023-2024ன் கீழ் மதிப்பீடு ரூ.349.00 இலட்சத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் (4D)35, நாள்:18.08.2023ன் படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.349/- இலட்சத்தில் 50% அரசு மான்யமாகவும் (175.00 இலட்சத்தில்) மீதமுள்ள 50% 174.00 இலட்சம்) நகராட்சியின் பங்குத் தொகையாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி திட்டப்பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வேண்டி விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு மற்றும் நகராட்சியின் பங்கு தொகையான 50% நகராட்சி பொது நிதியல் இருந்து மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் தினசரி சந்தை புதியதாக அமைக்கம் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையில் 50% ரூ.174.00 இலட்சம் நகராட்சியின் பங்குத் தொகையாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சியின் பங்குத் தொகையான ரூ.174.00 இலட்சம் நகராட்சியின் பொது நிதியின் கீழ் மேற்கொள்ள நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்றதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 192**

15. நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2022-2023 நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்கள் 1, 2, 3, 7, 11, 13 மற்றும் 14 வார்டுகளில் தார்சாலை அமைக்கும் பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் திரு.இ.கந்தசாமி என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவன கடிதத்தில் இப்பணிக்கு 30% நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கடிதம் வரப்பெற்றுள்ளது. தார்சாலை அமைக்கும் பணிகள் தரமற்று உள்ளதாக வார்டு நகர்மன்ற உறுப்பினர்களிடம் இருந்தும் வரப்பெற்ற புகார் மனுவின் பேரில் சென்னை உயர்நிதி மன்றம் மதுரை கிளையில் திரு.செ.ராஜகுமாரன் த/பெ.செல்லத்துரை அவர்கள் தொடர்ந்த வழக்கு எண் டபிள்யூ பி(எம்.டி) எண்:22278/2023ல் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சம்மந்தப்பட்டவர்களுக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பக்கோரி மாண்புமிகு நீதியரசரால் மூன்று வார காலம் அவகாசம் அளித்து மனு தேதி குறிப்பிடாமல் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட 30% விழுக்காடு தொகையை ஒப்பந்ததாரருக்கு வழங்குவது சம்மந்தமாக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு.P.திலக்குமார் அவர்கள் இவ்வலுவலக கடித ந.க.எண்..625/2023/இ1. நாள்:13.09.2023ல் தெளிவுரை கோரப்பட்டதில் அரசு வழக்கறிஞர் தனது 19.09.2023ம் தேதிய கடிதத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் படசத்தில் வழக்கு முடிந்து தீர்ப்பு பெறும் வரை ஒப்பந்ததாரருக்கு எவ்வித பில் பட்டியல் தொகை வழங்கக்கூடாது என கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். நகராட்சி வழக்கறிஞர் திரு.P.திலக்குமார் அவர்களின் 14.09.2023ம் தேதிய கேட்பின் படி வழக்கின் தெளிவுரை வழங்கிய வகையில் கட்டணம் ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம்) மட்டும் வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண் டபிள்யூ பி (எம் டி) எண்:22278/2023 ஒப்பந்ததாரருக்கு பில் பட்டியல் தொகை வழங்குவது சம்மந்தமாக தெளிவுரை வழங்கிய வகையில் சென்னை உயர்நிதி மன்ற மதுரை கிளை அரசு வழக்கறிஞர் திரு.P.திலக்குமார் அவர்களுக்கு ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம்) மட்டும் வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம். நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வழக்கறிஞருக்கு தொகை வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்..0002375/2023/பி2.
**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்:** 193

16. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்:145, நாள்:14.10.2022–ல் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெரு விளக்குகளை ஆற்றல் மிகு (LED) தெரு விளக்குகளாக மாற்றுவதற்குரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் பொருட்டு சிவகங்கை நகராட்சி பகுதியில் உள்ள 2056 தெரு விளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.226.52 இலட்சம் மதிப்பீட்டில் உரிய திட்ட கருத்துருவினை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு அதற்கான நிதி ஆதாரத்தினை TUFIDCO நிறுவனத்தின் மூலம் கடனாக பெற்றுக் கொள்ளவும் அக்கடன் தொகையினை 6 ஆண்டுகளில் 5% வட்டித் தொகையுடன் திரும்ப செலுத்திடவும் அரசாணையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி சிவகங்கை நகராட்சி பகுதியில் உள்ள 2056 தெரு விளக்குகளை ஆற்றல் மிகு LED விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.226.52 இலட்சம் மதிப்பீட்டில் உரிய திட்டக் கருத்துருவினை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. சிவகங்கை நகராட்சி பகுதியில் உள்ள 2056 தெருவிளக்குகளை ஆற்றல் மிகு (LED) தெரு விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.226.52 இலட்சம் மதிப்பீட்டில் உரிய திட்டக் கருத்துருவினை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட திட்டத்தினை TUFIDCO நிறுவனத்தின் மூலம் கடனாக பெற்றுக் கொள்ளவும் அக்கடன் தொகையினை 6 ஆண்டுகளில் 5% வட்டித் தொகையுடன் திரும்ப செலுத்திடவும் ம்ன்றம் அனுமதிக்கலாம்.
3. திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய திட்டக் கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களுக்கு சமர்ப்பித்தமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

தீர்மானம்: மன்றம் அனுமதித்தது அங்கீகரிக்கப்பட்டது.

ந.க.எண்..2425/2023/இ1.
**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்:** 194

17. சிவகங்கை நாடாளுமன்ற தொகுதி மக்களவை உறுப்பினர் திரு.காரத்திக் ப.சிதம்பரம் அவர்கள் சிவகங்கை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரண்மனை வாசல் அருகில் கல்ப் இஞ்சினியரிங் என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் நவீன காவல் கண்காணிப்பு அறை அமைப்பதற்கு தடையின்மை சான்று கோரியுள்ளார். அரண்மனை வாசல் அருகில் காவல் கண்காணிப்பு அறை அமைக்க போதிய இடவசதி இல்லாததால் சிவகங்கை நகராட்சி பேருந்து நிலையத்தில தற்போது

உள்ள காவல் துறை இடத்தில் நவீன காவல் கண்காணிப்பு அறை அமைக்க தடையின்மை சான்று வழங்கலாம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. உரிய விதி மற்றும் வழிமுறைகளை பின்பற்றி செயல்பட மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 195**

18. சிவகங்கை நகராட்சியில் பயன்பாட்டில் இருந்து வந்த hp M226DW (CNBKMBHBL6) பிரிண்டர் பழுதடைந்து உள்ளதை உள்ளூர் கணினி சர்வீஸ் மையத்தில் கொடுத்து, பழுதான பாகங்களை அகற்றி புதுப்பித்தும், தேவையான புதிய பாகங்கள் (accessories like pickup roller, 3 mtr usp printer wire, Tonner 88a 2 nos., Finger Speaker (1 set) வாங்கி பொருத்தியும் சரி செய்து வழங்கவும், மேற்படி வேலையை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று செய்யவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.5500/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 196**

19. சிவகங்கை நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள hp M226DW பிரிண்டர் பழுதடைந்த பாகங்களை புதியது பொருத்தும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில், 01.09.2023 அன்று கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | நிறுவனத்தின் பெயர் மற்றும் விலை விகிதம் | | |
|---|---|---|---|---|
| | | டிஜிடல் வியு கம்ப்யூட்ர்ஸ், சிவகங்கை | ஈசி கம்ப்யூட்டர்ஸ், சிவகங்கை | லாஜிக் கம்ப்யூட்டர்ஸ், சிவகங்கை |
| 1. | Hp M226DW Printer | ரூ.5100/– | ரூ.5650/– | ரூ.5450/– |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள மெசர்ஸ். டிஜிடல் வியு கம்ப்யூட்ர்ஸ், சிவகங்கை நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம்.

   ந.க.எண்..2362/2023/இ1.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 197**

20.சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் வணிக நிறுவனங்களின் தொழில்வரி பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி நிலுவைத் தொகை உள்ள நிறுவனங்களை நேரில் ஆய்வு செய்த போது பட்டியலில் கண்டுள்ள பல நிறுவனங்கள் தற்போது இல்லாமலும் மேற்படி இடத்தில் புதிய வணிக நிறுவனங்களும் உள்ளது தெரிய வருகிறது. புதிய வணிக நிறுவனங்களுக்கு புதியதாக தொழில்வரி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பட்டியலில் கண்டுள்ள வணிக நிறுவனங்களில் பல நிறுவனங்கள் இல்லாத காரணத்தால் அவற்றை வசூல் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, கீழேகண்ட பட்டியலின்படி தொகையினை வஜா செய்யலாம்.

| வ. எண். | வார்டுஎண் | வஜா செய்ய வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 1 | 132733 |
| 2 | 2 | 512193 |
| 3 | 3 | 0 |
| 4 | 4 | 286397 |
| 5 | 5 | 38500 |
| 6 | 6 | 0 |
| 7 | 7 | 5000 |
| 8 | 8 | 7145 |
| 9 | 9 | 54728 |
| 10 | 10 | 126391 |
| 11 | 11 | 97583 |
| 12 | 12 | 94821 |
| 13 | 13 | 21125 |
| 14 | 14 | 89493 |
| 15 | 15 | 28450 |
| 16 | 16 | 48420 |
| 17 | 17 | 243313 |
| 18 | 18 | 33330 |
| 19 | 19 | 91561 |
| 20 | 20 | 65135 |
| 21 | 21 | 584439 |
| 22 | 22 | 100498 |
| 23 | 23 | 64266 |
| 24 | 24 | 23185 |

| | | |
|---|---|---|
| 25 | 25 | 23945 |
| 26 | 26 | 0 |
| 27 | 27 | 45615 |
| 28 | பொறியாளர்பிரிவுகுறிப்பின்படிதற்போதுஒப்பந்தப்பணியில்இல்லாதஒப்பந்ததாரர்கள். | 611860 |
| 29 | நகரமைப்புஅலுவலரின்குறிப்பின்படிதற்போதுபணியில்இல்லாதகட்டிடவரைவாளர்கள் | 23565 |
| | மொத்தம் | 3453691 |

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. பட்டியலில்கண்டவணிகநிறுவனங்களில்பலநிறுவனங்கள்இல்லாதகாரணத்தால்அவற்றைவசூல்செய்யஇயலாதநிலைஉள்ளது. ஆகவேமேற்கண்டதொகையினைவஜாசெய்யஅனுமதிக்கலாம்.
3. நகர்மன்றத்தலைவர்அவர்களின்முன்அனுமதிபெற்றுவஜாசெய்யலாம்.

ந.க.எண். 3054/2023/அ1

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்:** 198

21.இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2021-2022 அதனை தொடர்ந்து 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டிற்கு திரு.வே.சுந்தர் என்பவருக்கு குத்தகைக்கு அனுபவித்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு தொகை அவர் செலுத்திய வைப்புத் தொகை ரூ.5,00,000/- இல் ஈடு செய்யப்பட வேண்டியுள்ளது.

| வ. எண். | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 2023-2024 ஆம்ஆண்டிற்கானகுத்தகைதொகை | 2,81,138 |
| 2. | 2023-2024ஆம் ஆண்டிற்கானவருமானவரி | 5,623 |
| 3. | பொருட்கள்மற்றும்சேவைவரி (GST 18%) | 50,605 |
| 4. | தொழில்வரி | 2500 |
| 5. | **மொத்தம்** | **3,39,866** |

தற்போது இயங்கி வந்த தினசரி சந்தை கட்டிடம் மிகவும் பழைமை வாய்ந்ததாக இருந்ததை புதியதாக தினசரி சந்தை கட்டிடம் கட்ட பணி துவங்கப்பட்டு உள்ள நிலையில் தினசரி சந்தை கடைகளை காலி செய்து ஏலதாரரால் ஒப்படைக்கப்பட்டு பழையகட்டிடம் இடிக்கப்பட்டுவிட்டது. பழைய கட்டிடம் தற்போது இடிக்கப்பட்டதால் நவம்பர் 2023 முதல் மார்ச் 2024 வரையிலான ஐந்து மாத குத்தகைக்கான இழப்பீட்டு தொகையை குத்தகைதாரர் வழங்ககோரியுள்ளார். குத்தகைதாரர் கடைகளை 10.11.2023 அன்று பிற்பகல் காலி செய்து ஒப்படைக்கப்பட்டதால் மீதமுள்ள நாட்களுக்கான இழப்பீட்டு தொகை விபரம்.

| | | |
|---|---|---|
| மொத்தகுத்தகைதொகை (12 மாதங்களுக்கு) | : | ரூ.339866 |
| மாதம்ஒன்றுக்கு | : | ரூ.28,322 |
| நவம்பர்மாதத்தில் 20 நாட்களுக்கானதொகை | : | ரூ.18,880 |
| நான்குமாதங்களுக்குதொகை (ரூ.28322 x 4) | : | ரூ.1,13,288 |
| குத்தகைக்கானமொத்தஇழப்பீட்டுதொகை (4 மாதங்கள் 20 நாட்கள்) | : | ரூ.1,32,168 |

தினசரி சந்தை கட்டிடம் தற்போது இடிக்கப்பட்டு விட்டதால் மீதமுள்ள குத்தகை நாட்களுக்கான இழப்பீட்டு தொகையான ரூ.1,32,168/-ஐ திரு.வே.சுந்தர் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. பணியின்அவசரஅவசியம்கருதிநகர்மன்றதலைவரின்முன்அனுமதி பெற்றதையும்மன்றம்அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3041/2020/அ1)**
**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்:** 199

22. சிவகங்கை நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகளுக்கு புதிய OS மாற்றுதல் மற்றும் லேசர் பிரிண்டர் 4 எண்ணம் சர்வீஸ் செய்தல் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50 இலட்சத்தில் 15.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கம் வைக்கப்படுகின்றன.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டு விலை விகிதம்** |
|---|---|---|
| 1. | M/S.Vellavan Enterprised, Sivagangai. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.20% குறைவு, |
| 2. | M/S.Sri Matha Printers, Sivakasi | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 5.51% அதிகம். |

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.20% குறைவாக வழங்கிய M/S.Vellavan Enterprised, Sivagangai. என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்:** 200

23.சிவகங்கை நகராட்சி அலுவலகத்திற்கு புதியதாக கணினிகள் 3 எண்ணம் மற்றும் HP Printer 1 எண்ணம் வாங்குதல் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00

இலட்சத்தில் 15.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/S.Vellavan Enterprised, Sivagangai. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.35% குறைவு, |
| 2. | M/S.Sri Matha Printers, Sivakasi | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.21% அதிகம். |

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.35% குறைவாக வழங்கிய M/S.Vellavan Enterprised, Sivagangai. என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 201**

24. சிவகங்கை நகராட்சியின் பயன்பாட்டிற்கு தற்போதுள்ள மென்பொருளில் வேலை செய்வதற்கு ஏற்றவாறும், அரசு செயலர், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை, மாவட்ட ஆட்சயிர் ஆகியோரின் காணொளி காட்சிக் கூட்டம் (Veido Conference) பங்கேற்க ஏதுவாகவும் மூன்று எண்ணம் புதிய கணினிகள் (All–in–one HP pc /core–i5) மற்றும் HP Printer (Print, scan, copy) ஒரு எண்ணம் பிரிண்டர் ஆகியவை புதியதாக வாங்கி பொருத்தவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3,00,000/–க்கும் (மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலையைச் செய்யவும் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 202**

25. சிவகங்கை நகராட்சியில் ஒப்பந்ததாரர்களின் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும் CGST, SGST, வருமான வரி மற்றும் ஒப்பந்த பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்டும் EPF, வருமான வரித் தொகையினை சம்மந்தப்பட்ட துறைகளுக்கு திரும்ப செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மேற்படி பிடித்தங்கள் தொடர்பாக சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு நகராட்சியின் சார்பில் சென்று விபரங்களை பெற்று வரவும் 2022–2023ம் ஆண்டிற்கு திருச்சி ஆலயம் அசோசியேட்ஸ்

நிறுவனத்தை நியமனம் செய்து கொள்ள அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.31,075/- ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம்அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்:** 203

26. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:01 முதல் 14 வரையுள்ள பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி 13.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சி.பாண்டியராஜன். சிவகங்கை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% குறைவு, |
| 2. | திரு.பி.முருகன், சிவகங்கை. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.69% அதிகம். |

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% குறைவாக வழங்கிய திரு.சி.பாண்டியராஜன். சிவகங்கைஎன்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்:** 204

27. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:15 முதல் 27 வரையுள்ள பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி 13.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சி.பாண்டியராஜன். சிவகங்கை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% குறைவு, |
| 2. | திரு.பி.முருகன், சிவகங்கை. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.69% அதிகம். |

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% குறைவாக வழங்கிய திரு.சி.பாண்டியராஜன். சிவகங்கைஎன்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்:** 205

28. சிவகங்கை நகராட்சி அலுவலகத்தில நகர்மன்றத் தலைவரின் அறையினுள் தரை விரிப்பு சேதமடைந்துள்ளதை புதிதாக அமைக்கவும் அலமாரிகள் அமைக்கவும், வர்ணம் பூசவும் மற்றும் நகரமைப்பு பிரிவினுள் அலுமினியத்தால் ஜன்னல் அமைக்கவும், எலக்ட்ரிக்கல் வேலைகள் செய்து கொடுக்கவும் மற்றும் அலுவலகத்தில் உள்ள பராமரிப்பு வேலைகள் செய்ய ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/- (ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1.மேற்காணும் பணியினை நகராட்சி வருவாய் நிதி 2023-24ன் கீழ் பணி மேற்கொள்ள மனறம் அனுமதி வழங்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்:** 206

29.சிவகங்கை நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத் தலைவர் அறை பராமரிப்பு பணி, நகரமைப்பு பிரிவு பராமரிப்பு பணி மற்றும் எலக்ட்ரிக்கல் வேலைகள் செய்து கொடுத்தல் பணிக்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 (ஐந்து இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு 26.10.2023 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எம்.கண்ணன். சிவகங்கை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.04% குறைவு, |
| 2. | திரு.பி.முருகன், சிவகங்கை. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.75% அதிகம். |

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.04% குறைவாக வழங்கிய திரு.எம்.கண்ணன். சிவகங்கை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2. மேற்படி பணியானது விரைந்து முடிக்க வேண்டியுள்ளதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 207**

30. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:10, மோகன் குமாரமங்கலம் தெருவில் சின்டெக்ஸ் மாற்றம் செய்தல் மற்றும் வார்டு எண்:23, நேரு பஜார் குறுக்குத் தெருவில் சின்டெக்ஸ் பழுது பார்த்தல் பணிக்கு ரூ.3,50,000/- (மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம்) மதிப்பீட்டில் 20.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.கு.மீனாம்பாள், சிவகங்கை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.25% குறைவு, |
| 2. | திரு.பி.முருகன், சிவகங்கை. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.47% அதிகம். |

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.04% குறைவாக வழங்கிய திருமதி.கு.மீனாம்பாள் சிவகங்கை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2. மேற்படி திட்டப் பணியானது விரைந்து முடிக்க வேண்டியுள்ளதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 208**

31. சிவகங்கை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு, பொறியியல் பிரிவு, பொதுப்பிரிவு சீருடை பணியாளர்களுக்கு 2023-2024ம் ஆண்டிற்கான சீருடைகள் கொள்முதல் கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனம் மூலம் பெறப்பட்டு சீருடை வழங்கவும், தையற்கூலி உட்பட உத்தேச செலவினம் ரூ.300 இலட்சம் தேவைப்படுவதால் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 209**

32. சிவகங்கை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டெங்கு ஒழிப்பு பணிகள், எதிர்வரும் வடகிழக்கு பருவ மழையினால் ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாகி டெங்கு காய்ச்சல் பரவ வாய்ப்புள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்நகர் பொது மக்கள் நலன் கருதி நிலவேம்பு குடிநீர் காய்ச்சி வழங்க வேண்டியுள்ளதால், தமிழ்நாடு அரசு நிறுவனமான TAMPCOL மூலம் 100கி.கி அளவிலான (500 கிராம் அளவில் 200 பாக்கெட்) நில வேம்பு பொடி வாங்கி பயன்பெற அதற்கான செலவினத் தொகை ரூ.52,261/– மட்டும் வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு :
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 210**

33. சிவகங்கை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டெங்கு காய்ச்சல் மற்றும் இதர காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகள் இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் 43990 மக்கள் தொகை 14771 வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் இருந்து வரும் நிலையில் இந்நகராட்சியின் ந.க.எண்..1537/2016/எச்1. நாள்:13.09.2022ன் படி ஒப்பந்த அடிப்படையில் 49 (DBC) தீவிர கொசுப்புழு ஒழிப்பு பணிகாளர்களைக் கொண்டு நகரில் பொசுப்புழு உற்பத்திகலன்களை கண்டறிந்து களைதல்,அபேட் மருத்து தெளித்தல், பொதுமக்களுக்கு சுகாதாரம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளானது 25.10.2023ல் முடிவடைவதால் 26.10.2023 முதல் 09.12.2023 வரை 45 தினங்களுக்கு நகர் மக்களின் பொது சுகாதார நலன் கருதி டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள புளூ கோல்டு சொலுயூசன் நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கவும், 25.10.2023 அன்று பணியாளர்கள் ஊதிய இருப்புத் தொகை ரூ.4,86,742/–ஆக உள்ளது. எனவே மேற்கண்ட 45 நாட்களுக்கு செலவினம் வழங்க ரூ.9.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு** :
மேற்படி பணியானது பொதுசுகாதாரப் பணி என்பதால் பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி

நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கியதையும் அதற்கான செலவின தொகை ரூ.9.10 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 211**

34. சிவகங்கை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டெங்கு காய்ச்சல் மற்றும் இதர காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகள் இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் 43990 மக்கள் தொகை 14771 வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் இருந்து வரும் நிலையில் இந்நகராட்சியின் ந.க.எண்..1537/2016/எச்1. நாள்:13.09.2022–ன் படி ஒப்பந்த அடிப்படையில் 49 (DBC) தீவிர கொசுப்புழு ஒழிப்பு பணிகாளர்களைக் கொண்டு நகரில் பொசுப்புழு உற்பத்திகலன்களை கண்டறிந்து களைதல்,அபேட் மருத்து தெளித்தல், பொதுமக்களுக்கு சுகாதாரம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளானது 09.12.2023ல் முடிவடைவதால் 10.12.2023 முதல் 24.01.2024 வரை 45 தினங்களுக்கு நகர் மக்களின் பொது சுகாதார நலன் கருதி டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள புளூ கோல்டு சொலுயூசன் நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு வழங்க, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

மேற்படி பணியானது பொதுசுகாதாரப் பணி என்பதால் பணியின் அவசர அவசியத்தை கருதி பணி நீட்டிப்பு செய்ய நகர் மன்றத் தலைவரின முன் அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 212**

35. சிவகங்கை மாவட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கீழடி அகழ்வாராய்ச்சி கட்டிடத்தை திறந்து வைப்பதாற்கான வருகையினையொட்டி அவர்களை வரவேற்கும் விதமாக வரவேற்பு விளம்பரம் கலைஞர் நூற்றாண்டு விழா நடத்துவது தொடர்பாக வாழ்த்து தெரிவிக்கும் விளம்பரம் மற்றும் நகராட்சி மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்தது கீழ்கண்ட பத்திரிக்கை நிறுவனங்களுக்கு விளம்பர கட்டணம் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மாலை தமிழ்நாடு | – | **Bill No:MT0634–2022–23. 31.12.2022** | – | ரூ.14490/– |
| 2. | **ESS ESS Publication** தமிழ் சுடர் | – | A/ADVT/MA/2023/465. 05.03.2023 | – | ரூ.16800/– |
| 3. | இந்து தமிழ் திசை | – | **Invoice NO:6 02.06.2023** | – | ரூ.42000/– |
| 4. | மதுரை மாலை முரசு | – | **Bill No: AD 21222175** | – | ரூ.6804/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | மாலை தமிழகம் | – | 23.03.2022<br>Bill No: MT 5278/2022–23 26.12.2022 | – | ரூ.15330/– |
| 6. | தினத்தந்தி | – | Bill No: 2324 MDU 211050854– 21.09.2023 | – | ரூ.4989/– |
| | | | மொத்தம் | – | ரூ.100413/– |

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 213**

36. இந்நகராட்சியில் தட்டச்சர் இரண்டு பணியிடங்கள் கடந்த ஒன்பது ஆண்டுகளாக காலியாக உள்ளது. தட்டச்சர் பணியின் அவசர அவசியம் கருதி மற்றும் நிர்வாக நலன் கருதி மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்துள்ள 2022–2023ம் ஆண்டிற்கான விலை விகித பட்டியலின் படி ரூ.460/– என்ற அடிப்படையில் ஒரு தட்டச்சு பணியாளரை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தட்டச்சர் பணி அவசியம் கருதி 2023–2024ம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சியரின் விலை விகித பட்டியலில் நிர்ணயித்துள்ள ரூ.493/– ஊதிய விகிதத்தின் படி 01.12.2023 முதல் நிரந்தரமாக தட்டச்சு பணியாளர் பணியிடம் பூர்த்தி செய்யப்படும் வரை தற்காலிகமாக தட்டச்சர் இரண்டு நபர்களை மாவட்ட ஆட்சியரின் அந்தந்த நிதியாண்டிற்குரிய ஊதிய விகித மாற்றத்திற்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் இருநபர்களை நியமித்துக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. தட்டச்சர் பணியின் அவசர அவசியம் கருதி, இரு நபர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படிஊதிய உத்தேச செலவின தொகை ரூ.3,50,000/ஐ பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகர்மன்ற தலைவர் அவர்களின் 30.11.2023 முன் அனுமதி வழங்கியுள்ளதை ஏற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தப்புப்ளி அடிப்படையில் மாவட்ட ஆட்சியரின் 2023–2024ம் ஆண்டிற்கான ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்..1199/2020/சி1)

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 214**

37. விளம்பரபலகைகள் அகற்றுவது சம்மந்தமாக நகராட்சி நிர்வாகத்தின் மீது தடை விதிக்க கோரி சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் ரைட் சாய்ஸ் அவுட்டோர் அட்வர்டைசிங் நிறுவனர் திருமதி.விஜயலட்சுமி என்பவர் அரசு செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நகராட்சி நிர்வாக

இயக்குநர், சென்னை, ஆணையாளர் சிவகங்கை நகராட்சி, ஆகிய மூவரையும் பிரதி வாதிகளாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கு எண்:டபிள்யூபி (எம்.டி) எண்:15332/2023 எண்ணிட்ட வழக்கில் நகராட்சி ஆணையாளர் சார்பாக வக்காலத்து படிவம் தாக்கல் செய்து வழக்கை நடத்திச் சென்று நகராட்சிக்கு சாதகமாக வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பு பெறப்பட்டதால் பேரில் சென்னை உயர் நீதி மன்றம் மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு.அ.கதிரவன் அவர்களின் 02.08.2023ம் தேதிய பில் பட்டியல் படி வழக்கு கட்டணம் ரூ.9500/– (ரூபாய் ஒன்பதாயிரத்து ஐநூறு) மட்டும் வழக்கு கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

வழக்கு கட்டணம் ரூ.9500/–(ஒன்பதாயிரத்தி ஐநூறு) மட்டும் சென்னை உயர்நிதி மன்றம் மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு.அ.கதிரவன் அவர்களுக்கு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்:2393/2023/எப்1)

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 215**

38. விளம்பரபலகைகள் அகற்றுவது சம்மந்தமாக நகராட்சி நிர்வாகத்தின் மீது தடை விதிக்க கோரி சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் Essential Advertising Consultant, Maduri நிறுவனம் அரசு செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, ஆணையாளர் சிவகங்கை நகராட்சி, ஆகிய மூவரையும் பிரதி வாதிகளாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கு எண்:டபிள்யூபி (எம்.டி) எண்:15331/2023 எண்ணிட்ட வழக்கில் நகராட்சி ஆணையாளர் சார்பாக வக்காலத்து படிவம் தாக்கல் செய்து வழக்கை நடத்திச் சென்று நகராட்சி சாதகமாக வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பு பெறப்பட்டதால் பேரில் சென்னை உயர் நீதி மன்றம் மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு.அ.கதிரவன் அவர்களின் 02.08.2023ம் தேதிய பில் பட்டியல் படி வழக்கு கட்டணம் ரூ.9500/– (ரூபாய் ஒன்பதாயிரத்து ஐநூறு) மட்டும் வழக்கு கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

வழக்கு கட்டணம் ரூ.9500/–(ஒன்பதாயிரத்தி ஐநூறு) மட்டும் சென்னை உயர்நிதி மன்றம் மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு.அ.கதிரவன் அவர்களுக்கு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்:2393/2023/எப்1)

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 216**

39. விளம்பரபலகைகள் அகற்றுவது சம்மந்தமாக நகராட்சி நிர்வாகத்தின் மீது தடை விதிக்க கோரி சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் எஸ்.எஸ் விளம்பர நிறுவனம் மதுரை அதன் உரிமையாளர் திரு.ஸ்ரீனிவாசன் என்பவர் அரசு செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, ஆணையாளர் சிவகங்கை நகராட்சி, ஆகிய மூவரையும் பிரதி வாதிகளாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கு எண்:டபிள்யூபி (எம்.டி) எண்:15333/2023 எண்ணிட்ட வழக்கில் நகராட்சி ஆணையாளர் சார்பாக வக்காலத்து படிவம் தாக்கல் செய்து வழக்கை நடத்திச் சென்று நகராட்சி சாதகமாக வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பு பெறப்பட்டதால் பேரில் சென்னை உயர் நீதி மன்றம் மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு.அ.கதிரவன் அவர்களின் 02.08.2023ம் தேதிய பில் பட்டியல் படி வழக்கு கட்டணம் ரூ.9500/-(ரூபாய் ஒன்பதாயிரத்து ஐநூறு) மட்டும் வழக்கு கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

வழக்கு கட்டணம் ரூ.9500/-(ஒன்பதாயிரத்தி ஐநூறு) மட்டும் சென்னை உயர்நிதி மன்றம் மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு.அ.கதிரவன் அவர்களுக்கு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 217**

40. சிவகங்கை நகராட்சி 2022-23ம் ஆண்டுக்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் A4 Paper, Legal Paper, அம்மா உணவகம் இட்லி டோக்கன்இ M.Book, Log Book, Ruled Note, மூடுதாள், பிறப்பு இறப்பு படிவங்கள், புதுவரி படிவம், பெயர் மாற்றம் படிவங்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.10,00,00/-ஆகும். அதில் 2022-2023ம் வருடத்தில் அனுமதிக்கப்பட்ட தொகை கூடுதலாக அலுவலக பயன்பாட்டு பொருட்கள் வாங்கப்பட்டதற்கு கூடுதலாக செலவு செய்த ரூ.6,60,957/- போக மீதம் உள்ள தொகை ரூ.3,39,043/-க்கு 2023-24ம் ஆண்டு அலுவலக உபயோகப் பொருட்கள் வாங்க பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 218**

41.. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு-7, சாஸ்திரி 4வது தெருவில் திருமதி.எம்.ஜெயந்தி என்பவர் கட்டிடம் கட்டுவதற்கு இணையதளம் மூலம்

கட்டிட விண்ணப்பம் சமர்ப்பித்தார். மனுதாரர் கட்டிட அனுமதிக்கான கட்டணம் ரூ.69140/- 01.06.2023 அன்று செலுத்தினார். மனுதாரர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்துடன் உரிய ஆவணங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவில்லை. எனவே, மனுதாரரின் விண்ணப்பம் அனுமதியின்றி திருப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து மனுதாரர் தான் செலுத்திய கட்டணத்தினை திரும்ப தரக்கோரி 21.06.2023 அன்று மனு செய்ததின் பேரில் மனுதார்ர் செலுத்திய கட்டணத்தில் ஆய்வுக் கட்டணம் ரூ.1000/- மற்றும் கொடி நாள் கட்டணம் ரூ.1500/- ஆக மொத்தம் ரூ.2500/- தவிர மீதமுள்ள தொகை ரூ.66640/-ஐ மனுதாரருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 219**

42.இந்நகராட்சி பொதுப்பிரிவிற்கு தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ளதால், தட்டச்சர் பணி அவசியம் கருதி ஒப்பந்த அடிப்படையில் 01.12.2023 முதல் இரண்டு தட்டச்சர் பணியிடங்கள் நிரந்தரமாக பூர்த்தி செய்யப்படும் வரை மேற்படி தட்டச்சர் பணியாளர்கள் வழங்கிட 15.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி** | **நாள் ஒன்றுக்கு அளித்துள்ள விலை விகிதம்** |
|---|---|---|
| 1. | வல்லவன் என்டர்பிரைசஸ்,<br>43A, தெற்கு ராஜவீதி, சிவகங்கை. | ரூ.493/- |
| 2. | ஸ்ரீ மாதா பிரிண்டர்ஸ்,<br>65 எ, ஆறுமுகம் ரோடு,<br>சிவகாசி. | ரூ.520/- |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்:1ல் குறிப்பிட்டுள்ள வல்லவன் என்டர்பிரைசஸ் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.493/- விலைவிகிதம் குறைவாக உள்ளதாலும் மேலும் 2023-2024

மாவட்ட ஆட்சியரின் விலை விகித தொகை ரூ.493/- அதே விலை விகிதத்தில் உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரித்து 01.12.2023 முதல் இரண்டு தட்டச்சு பணியிடங்கள் நிரந்தரமாக பூர்த்தி செய்யப்படும் வரை மாவட்ட ஆட்சியரின் விலை விகித்த்தில் அந்தந்த நிதியாண்டிற்கு ஏற்றவாறு அவ்வப்போது மாற்றத்திற்கேற்ப இரண்டு தட்டச்சர்கள் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 220**

43.சிவகங்கை நகராட்சி பொதுமக்களுக்கு 2010ம் ஆண்டு முதல் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தினமும் 2.86 எம்.எல்.டி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2010ம் ஆண்டில் ஒரு கிலோ லிட்டர் ரூ.4.50 வீதம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட்டது. மேலும் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5%உயர்த்தியும் இறுதியாக தற்போது, 30.08.2023 முதல் ஒரு கிலோ லிட்டர் குடிநீர் ரூ.16.00 ஆக உயர்த்தி கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது( நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்..12, நாள்..22.08.2023) ஆனால், தற்போது வரை பொதுமக்களிடம் குடியிருப்புகளுக்கு ரூ.100/- வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதனால் மின்கட்டணம், குடிநீர் கட்டணம் மற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் ஆகியவைகள் செலுத்த மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, குடியிருப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/- வீதமும் மற்றும் வணிக வளாகங்களுக்கு ரூ.350/- வீதமும் உயர்த்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்: 221**

44. சிவகங்கை நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான கடைகளான 1.வாரச்சந்தை அருகில் நகராட்சி கட்டிடம் கடை எண்..3, 2.அஜீஸ் தெரு தெரு பேருந்துநிலைய கட்டிடம் கடை ஆகிய இரண்டு கடைகளும் பயன்பாடின்றி பூட்டப்பட்டு உள்ளது. நகரட்சியின் வருவாயை கருத்திற்கொண்டு மேற்கண்ட கடைகளை குத்தகை இனங்களில் கொண்டு வர ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் புறப்படும் நேரம் குறித்த விளம்பர அறிவிப்பு வழங்குவதற்கான

உரிமத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்..3041/2020/அ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 222**

45. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நீண்ட கால குத்தகை இனங்களில் வாடகை செலுத்தாமல் உள்ள மற்றும் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ள கடைகள் மற்றும் பேருந்து நிலையத்தில் புதியதாக கட்ட இடிக்கப்பட்ட கடைகளுக்குரிய கேட்புகள் கீழ்க்கண்ட விபரப்படி உள்ளன.

| வ. எ ண். | கடையின் விபரம் | வரிவிதிப்பு எண். | வரிவிதிப்புதார் பெயர் | செலுத்த வேண்டிய தொகை | ரத்து செய்வதற்கான காரணம் | வருடம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பேருந்து நிலைய கடை எண்.5 | 112/2004130 | எஸ்.மதியழகன் | 70224 | பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணிக்காக கட்டிடம் இடிக்கப்பட்டது | 2021–2022–Dec முதல் 2023–2024–Mar |
| 2. | பேருந்து நிலைய வடக்கு அறை | 112/2004128 | எஸ்.மதியழகன் | 51922 | பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணிக்காக கட்டிடம் இடிக்கப்பட்டது | 2021–2022–Feb முதல் 2023–2024–Mar |
| 3. | பேருந்து நிலைய கடை எண்.3 | 112/2004106 | எஸ்.ராமன் த/பெ.சங்கர தேவர் | 67899 | பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணிக்காக கட்டிடம் இடிக்கப்பட்டது | 2022–2023–Mar முதல் 2023–2024–Mar |
| 4. | உழவர் சந்தை கடை எண்.4 | 112/505 | எம்.சாரதிபாண்டியன் | 168686 | கூடுதல் வாடகை தவறாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. | 2016–2017–Jul முதல் 2022–2023–Jun |
| 5. | மார்க்கெட் பில்டிங் 2–ம் | 112/2004042 | ஆனந்தவள்ளி | 128698 | மறு ஏலம் வைக்கப்பட்டு | 2005–2006–Jun |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தளம் | | | | தற்போது கார்த்திகேயன் என்பவர் கடை நடத்தி வருகிறார். | முதல் 2010–2011–Dec |
| 6. | டிவி விளம்பரம் | 112/2004025 | முருகன் | 63558 | ஏலம் நடைபெறவில்லை | 2020–2021–Jan முதல் 2022–2023–Mar |
| 7. | பேருந்து நிலைய கடை எண்.4 மானாமதுரை பேருந்து நிறுத்தம் | 112/BD01/00011 | எம்.இராஜா அமுதன் | 219362 | பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணிக்காக கட்டிடம் இடிக்கப்பட்டது | 2022–2023–Jan முதல் 2023–2024–Jan |
| 8. | பேருந்து நிலைய கடை எண்.15 | 112/2004119 | ஆதிமூர்த்தி | 130693 | சீல் வைக்கப்பட்டு நகராட்சி வசம் உள்ளது. | 2020–2021–Nov முதல் 2022–2023–Jun |
| 9. | வாரச்சந்தை கடை எண்.1 | 112/BD01/00025 | பெ.வேலுச்சாமி | 55224 | கட்டிடம் பழுதடைந்து உள்ளது. ஏலம் எடுத்தவர் கடை நடத்தவில்லை. | 2021–2022–Apr முதல் 2023–2024–Mar |
| **மொத்தம்** | | | | 956266 | | |

மேற்கண்ட இனங்களை வஜா செய்ய மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3041/2020/அ1

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத்தீர்மானஎண்: 223**

46.வருவாய் கோட்டாட்சியர், சிவகங்கை அவர்களின் கடிதம் ந.க.அ1/9466/2023, நாள்.26.12.2023–ல் சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் மற்றும் நகர் வார்டு – இ, பிளாக்–5, சர்வே எண்.6–ல், 45 செண்ட் பரப்பளவுள்ள இடத்தில் வாலாஜா நவாப் ஜூம்ஆ பள்ளிவாசல் கட்டிடம் எழுப்ப தமிழ்நாடு வக்பு வாரியம் ஆணை

பிறப்பித்த்தன்பேரில் சிவகங்கை நகராட்சி பகுதியில் புதியதாக வாலாஜா நவாப் ஜூம்ஆ பள்ளிவாசல் கட்டிட அனுமதி வழங்க கோரியது தொடர்பாக நகராட்சியின் தீர்மானம் அனுப்பிவைக்க கோரப்பட்டுள்ளது.

இடம் ஆய்வு செய்யப்பட்டது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மதுரை ரோடு, நகரளவை வார்டு –E, பிளாக்–5, நகரளவை எண்.6–ல் 1877 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடம் சிவகங்கை வாலாஜா நவாப் பள்ளிவாசல் ஈதுகா பள்ளிவாசல் என்ற பெயரில் நகரளவை ஆவணங்களில் பதிவாகியுள்ளது. மேற்படி இடம் காலியாக உள்ளது. மேற்படி இடத்தில் மதம் சார்ந்த கட்டிடம் கட்ட மேற்படி பள்ளிவாசல் நிருவாகத்தினரால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன் விதி எண்.9 இணைப்பு XVII(6)–ன்படி மதம் சார்ந்த கட்டிடங்களுக்கு, அனுமதி அளிப்பதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தடையின்மை சான்று பெறப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி மதுரை ரோடு , வார்டு –இ, பிளாக்–5, சர்வே எண்.6–ல் உள்ள 1877 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் வாலாஜா நவாப் ஜூம்ஆ பள்ளிவாசல் கட்டிடம் கட்ட நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண்.3362/2023/எப்1)**
**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மானஎண்:** 224

நகர்மன்றத்தலைவர்,
சிவகங்கை நகராட்சி